தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# 'சுற்றுச்சூழல் பாதுகாப்பில் அனைத்து குடிமகனுக்கும் பங்கு'




**உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தின் (ஐ.எப்.ஜி.டி.பி.,) சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையத்தில் (என்விஸ்) நடந்த சிறப்பு நிகழ்ச்சியில், விழிப்புணர்வு சுவரொட்டி வெளியிடப்பட்டது.**

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தின்(ஐ.எப்.ஜி.டி.பி.,) சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையத்தில் (என்விஸ்), சிறப்பு நிகழ்ச்சி நேற்று நடந்தது.

ஐ.எப்.ஜி.டி.பி., யின் தலைமை விஞ்ஞானி யசோதா, நிகழ்ச்சியை துவக்கி வைத்து பேசுகையில், ''சுற்றுச்சூழலை பாதுகாப்பதில், ஒவ்வொரு குடிமகனுக்கும் முக்கிய பங்கு உள்ளது. சுற்றுச்சூழலைப் பாதுகாக்க அனைவரும் கைகோர்க்க வேண்டும்,'' என்றார்.

நிகழ்ச்சியில், என்விஸ் ஒருங்கிணைப்பாளர் முது நிலை முதன்மை விஞ்ஞானி கண்ணன் வாரியர் இசையமைத்து பாடிய, இயற்கை குறித்த பாடல் வெளியிடப்பட்டது. கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, 'சுற்றுச்சூழலின் முக்கியத்துவம்' என்ற தலைப்பில் அனைத்து தரப்பு மக்களுக்கும் ஆன்லைன் ஓவியப்போட்டி நடத்தப்பட்டது. பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

'ஒரே ஒரு பூமி' என்ற நடப்பாண்டின் கருப்பொருளை எடுத்துக்காட்டும், விழிப்புணர்வு சுவரொட்டி வெளியிடப்பட்டது. கோவை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு, அதன் நகல் வழங்கப்பட்டது. விழிப்புணர்வு சுவரொட்டிகளின் மென் பிரதிகள், பல்வேறு பங்குதாரர்களுக்கு மின்னணு முறையில் பகிரப்பட்டன. என்விஸ் மூத்த திட்ட அலுவலர் விக்னேஸ்வரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

35. News in Dinamalar, Coimbatore, 04.06.2022, Observance of World Environment Day 2022 by IFGTB ENVIS.